**மல்பரி நடவு மானியம்: 33 பேருக்கு ரூ.2 லட்சம்**
First Published : 21 Feb 2012 12:22:26 PM IST

கிருஷ்ணகிரி, பிப். 20: பட்டு வளர்ச்சித்துறை சார்பில், மல்பரி நடவு மானியமாக 33 விவசாயிகளுக்கு ரூ.2 லட்சத்துக்கான காசோலைகள் வழங்கப்பட்டன.
மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற குறைதீர் கூட்டத்தில் இந்த காசோலைகளை ஆட்சியர் சி.என்.மகேஸ்வரன் வழங்கினார்.
இக் கூட்டத்தில் மொத்தம் 157 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன. மாவட்ட வருவாய் அலுவலர் சி.பிரகாசம், பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநர்கள் பி.ஏ.கதிர்வேல்,ஜி.தீர்த்தகிரி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 72.46 அடி**
First Published : 21 Feb 2012 10:29:37 AM IST

ஈரோடு, பிப். 20: பவானிசாகர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 72.46 அடியாக இருந்தது.
அணைக்கு விநாடிக்கு 469 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 300 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 12.01 டி.எம்.சி.
கிராமப்புற வளர்ச்சியில் கவனம் தேவை
கோவை, பிப்.20: இந்தியா 2020 என்ற இலக்கை அடைய கிராமப்புற வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்று முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் வலியுறுத்தினார்.

கோவை காளப்பட்டி சாலையில் உள்ள என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாணவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி திங்கள்கிழமை
நடைபெற்றது. இதில் அவர் பேசியது:
கடந்த 60 ஆண்டு காலம் பணி அனுபவத்தில் சில அனுபவங்கள் என்னை ஈர்த்துள்ளன. தற்போதுள்ள உலகமயமாக்கல் கொள்கையால் அறிவு மட்டுமே நாடு மற்றும் சமுதாயத்தின் சக்தியாகத் திகழ்கிறது.
இந்தியா-2020 என்ற பார்வையில், தற்போதுள்ள இளைய தலைமுறைக்குப் புதிய சவால்கள் காத்துக்கொண்டிருக்கின்றன. தொடர்ச்சியாக கனவு காணும்போதுதான் இலக்கை அடைவதற்கான அறிவைப் பெற்று இலக்கை அடைய முடியும்.
மாணவர்களின் எண்ணங்கள் திசைமாறாமல் இருக்க பெரிய இலக்கை நோக்கிச் செயல்பட வேண்டும். இதற்காக விளையாட்டு, கலை மற்றும் போட்டிகள் மூலம் தங்களை சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.
இந்தியா 2020 என்ற பார்வைக்காக, நாம் சில இலக்குகளை அடைந்திருந்தாலும் அடுத்த 8 ஆண்டுகளுக்கு சில குறிப்பிட்ட துறைகளில், குறிப்பாக கிராமப்புற வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றார்.
லோக்பால் சட்டம்:
பின்னர் செய்தியாளர்களிடம் கலாம் கூறியது:
லோக்பால் சட்டம் செயல்படுத்தினால் தவறு செய்தவர்கள் சிறைக்குள் தள்ளப்படுவார்கள். ஆனால், தங்களது பெற்றோர்கள் முறைகேடுகளில் ஈடுபடாதவர்கள் என்பதை குழந்தைகள் உறுதி செய்து கொண்டால் நாட்டில் ஊழலை முற்றிலுமாக அகற்ற முடியும்.
கூடங்குளம் அணுஉலை தொடர்பாக சில பக்கங்களில் அறிக்கை தயாரித்துள்ளேன், அதைப் பார்த்தால் அதன் அவசியம் தேவையா என்பது தெரியும் என்றார்.
நிகழ்ச்சியில், பாரதியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சி.சுவாமிநாதன், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத் துணைவேந்தர் பி.முருகேசபூபதி, கோவை மெடிக்கல் சென்டர் மற்றும் மருத்துவமனையின் தலைவர் நல்லா ஜி.பழனிசாமி, நிர்வாக அறங்காவலர் தவமணி டி.பழனிசாமி, தலைமை நிர்வாக அதிகாரி புவனேஸ்வரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**முட்டை விலை**

First Published : 21 Feb 2012 12:23:03 PM IST

நாமக்கல், பிப்.20: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமை, அறிவித்த முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை முட்டை ஒன்றுக்கு நாமக்கல்லில் ரூ.2.80, சென்னையில்
ரூ. 2.88.

கறிக்கோழி விலை

பல்லடம் பிராய்லர்ஸ் ஒருங்கிணைப்புக் குழு திங்கள்கிழமைஅறிவித்த கறிக்கோழியின் பண்ணைக் கொள் முதல் விலை கிலோ ரூ.56, முட்டைக் கோழி கிலோ ரூ.33.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**நுகர்வோர் விலை குறியீட்டு எண் பணவீக்கம் 7.65 சதவீதம்**

பிப்ரவரி 22,2012,02:12



புதுடில்லி:மத்திய அரசு, முதன்முறையாக, தேசிய அளவில், கிராமம் மற்றும் நகர்புறங்களில், சில்லரை விற்பனை அடிப்படையிலான பணவீக்கத்தை வெளியிட்டுள்ளது.சில்லரை விற்பனையில், நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் அடிப்படையில், நாட்டின் பணவீக்கம், சென்ற ஜனவரி மாதத்தில், 7.65 சதவீதம் என்ற அளவில் உள்ளது.

இதே மாதத்தில், ஆண்டுக்கணக்கின் அடிப்படையில், உணவு, குளிர்பானங்கள் ஆகியவற்றின் விலை, 4.11 சதவீதம் என்ற அளவில் மிதமாக அதிகரித்துள்ளது. இது தவிர, எரிபொருள், விளக்குகள், துணிகள், படுக்கைகள், மற்றும் காலணிகள் ஆகிய துறைகளுக்கான பணவீக்கம் இரட்டை இலக்கமாக உள்ளது.

சென்ற ஜனவரியில், கிராமம் மற்றும் நகர்புறங்களில், ஒட்டுமொத்த சில்லரை விற்பனை அடிப்படையிலான பணவீக்கம் முறையே, 7.38 சதவீதம் மற்றும் 8.25 சதவீதம் என்ற அளவில் உள்ளது. சென்ற ஜனவரியில், காய்கறிகளுக்கான பணவீக்கம், கடந்தாண்டு இதே மாதத்துடன் ஒப்பிடுகையில், 24 சதவீதத்திற்கும் அதிகமாக குறைந்துள்ளது.இருப்பினும், இதர உணவு மற்றும் பானங்களுக்கான பணவீக்கம் உயர்ந்துள்ளது. குறிப்பாக, கிராமம் மற்றும் நகர் பகுதிகளில்,

இதற்கான பணவீக்கம் முறையே 4.18 மற்றும் 3.98 சதவீதம் என்ற அளவில் உள்ளது.
ஆண்டுக்கணக்கில், பால் மற்றும் பால் பொருட்களுக்கான பணவீக்கம், 16.53 சதவீதம் என்ற அளவில் மிகவும் அதிகரித்துள்ளது. மேலும், எண்ணெய், கொழுப்பு நிறைந்த பொருட்களின் பணவீக்கம் 13.74 சதவீதம் என்ற அளவில் உயர்ந்துள்ளது. மேலும், ஊறுகாய் வகைகள் மற்றும் நறுமணப் பொருட்கள் ஆகியவற்றிற்கான பணவீக்கம் 11.83 சதவீதம் அதிகரித்துள்ளது.
பழங்களின் விலை 10.62 சதவீதம் என்ற அளவில் உள்ளது.
சென்ற ஜனவரி மாதத்தில், முட்டை, இறைச்சி மற்றும் மீன் ஆகியவற்றிற்கான பணவீக்கம் 10.45 சதவீதம் உயர்ந்துள்ளது. உணவு தானியங்கள் மற்றும் பருப்பு வகைகள் ஆகியவற்றிற்கான விலை முறையே 2.69 மற்றும் 5.66 சதவீதம் என்ற அளவில் அதிகரித்துள்ளது. மேலும், சர்க்கரை விலை, கடந்தாண்டு இதே மாதத்துடன் ஒப்பிடுகையில், 1.84 சதவீதம் உயர்ந்துள்ளது.
நாடு தழுவிய அளவில், எரிசக்தி மற்றும் விளக்குகள் ஆகியவற்றிற்கான பணவீக்கம் 13.13 சதவீதம் என்ற அளவில் உள்ளது. இது, கிராமப்புறங்களில், 11.52 சதவீதம் என்ற அளவிலும், நகர்புறங்களில், 12.43 சதவீதம் என்ற அளவிலும் உள்ளது. மேற்கண்ட புள்ளிவிவரங்கள் அனைத்தும், 310 பெரு நகரங்கள் மற்றும் நகரங்களிலும், 1,180 கிராமப் பகுதிகளிலும் திரட்டப்பட்டது ஆகும். மத்திய அரசு, வீடுகள் மற்றும் இதர வகைகளுக்கான பணவீக்கத்தை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**கேரளாவில்பசுக்களுக்குகாப்பீடு திட்டம்**

பிப்ரவரி 21,2012,09:58



பாலக்காடு:கேரள மாநிலத்தில், பசுக்களுக்கு காப்பீடு வழங்கும் திட்டத்திற்கு, மத்திய விவசாய மையம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.கேரள மாநிலத்தில், பசுக்களுக்கு காப்பீடு வழங்குவது, கடந்த ஆண்டு தற்காலிகமாக நடைமுறை படுத்தப்பட்டது. இத்திட்டம் சிறப்பாக செயல்பட்டதால், முழுமையாக செயல்படுத்த, மத்திய விவசாய மையம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.காப்பீடு திட்டத்தில், பசு விபத்து அல்லது நோயில் இறந்தால், புதிய பசு வாங்குவதற்கு காப்பீடு திட்டத்தில்

வழிவகை செய்யப்பட்டுள்ளது. பசு வளர்போர் காப்பீடு செய்ய வேண்டும். 10 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பசுவிற்கு, ஆண்டுக்கு, 100 முதல், 300 ரூபாய் வரை பிரிமியம் செலுத்த வேண்டும். இத்திட்டத்திற்காக மத்திய அரசு, 3 கோடி ரூபாயும் மாநில அரசு 2.25 கோடி ரூபாயும் வழங்கியுள்ளன.

## முட்டை பொரிக்கும் கருவி

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2012,00:00 IST

**அடைகாத்தல்**: வெப்பநிலை, ஈரப்பதம், வாயுச்சூழ்நிலை மற்றும் முட்டைகளைத் திருப்பிவிடுதல் போன்ற இயற்கைக் காரணிகள் ஒரு வெற்றிகரமான குஞ்சுபொரிப்ப தற்கு அவசியம். அடைக்காப்பானின் உள்வெப்பநிலையானது அதைத் தயாரிப்பவர் கூறும் அளவு வைத்துக் கொள்ளலாம். பொதுவாக மிதமான வெப்பநிலையே விரும்பப்படுகிறது. இது பொதுவாக 99.5 - 100.5 டிகிரி பாரன்ஹீட் (37.2 டிகிரி செ - 37.8 டிகிரி செ) வரை. குறைந்த வெப்பநிலை கரு வளர்ச்சியைக் குறைக்கும். (சாதகமற்ற) அசாதாரண அதாவது அதிக வெப்பநிலை நிலவும்போது வளர்ச்சியைப் பாதித்து கோழிகளில் இறப்பு வீதத்தை அதிகப்படுத்துகிறது.
கருமுட்டைகள் அகலமான பக்கம் மேல்நோக்கியவாறு வைத்தல் வேண்டும். நவீன அடைகாப்பான்களில் முட்டைகள் தன்னிச்சையாகவே ஒரு நாளைக்கு 8 அல்லது அதற்கு மேற்பட்ட முறைகள் திருப்பிக்கொள்ளுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.
5 அல்லது 7வது நாளிலிருந்து ஒளியில் கரு வளர்நிலை காண வேண்டும். அப்போது கருவுறாத முட்டைகளையும், 18வது நாளில் சிதைந்த அல்லது இறந்த முட்டைகளையும் நீக்கிவிடலாம். ஆட்கூலியைக் குறைக்க பெரும்பாலும் 17 அல்லது 18ம் நாளில்தான் ஒளியில் கருவளர்நிலை காணப்படுகிறது. ஒளியை உட்செலுத்தும்போது அது முட்டையினுள் ஒளி ஊடுருவிச் செல்ல இயலாமல் இருட்டாக இருந்தால் கரு நன்றாக வளர்ந்துள்ளது என்றும் சிறிதளவு ஒளி கசியக்கூடியதாக இருந்தால் கரு இறந்துவிட்டது என்றும் ஒளி எளிதில் ஊடுருவக்கூடியதாக இருந்தால் அது கருவுறாத முட்டை என்றும் அறிந்துகொள்ளலாம். கரு வளர்ந்துள்ள முட்டைகளை மட்டுமே பொரிப்பகத்திற்கு மாற்றம் செய்ய வேண்டும். கோழியின் வம்சாவளியைப் பாதுகாக்க ஒரு கோழியின் முட்டைகளை ஆண் பெண் தனித்தனிப் பிரிவுகளாகப் பிரித்து அடுக்கி வைக்க வேண்டும்.
அடைகாப்பான் மற்றும் குஞ்சு பொரிப்பகத்தை முற்றிலும் முட்டையை அதில் வைப்பதற்கு முன்னரே ஒரு முறை சோதனை செய்து, ஏதேனும் குறையிருந்தால் சரிசெய்ய வேண்டும். நன்கு கழுவி, கிருமிநாசினி கொண்டு சுத்தப்படுத்தி வைக்க வேண்டும். இது நோய் பரவலின் தன்மையைக் குறைக்கும். தொடர்புக்கு: ஆர்.ஜி.ரீஹானா, அக்ரி கிளினிக், 268/77, பழைய

ஹவுசிங் யூனிட், தாராபுரம்-638 657.

-ஆர்.ஜி.ரீஹானா,தாராபுரம், 89037 57427.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2012,00:00 IST



**ஈமு கோழிமுட்டை - பிரச்சனைகள் - தீர்வுகள்:** பெண் ஈமு கோழி 18 முதல் 26 மாத வயதிலிருந்து முட்டையிட தொடங்கும். கரும்பச்சை நிறமான முட்டை யின் எடை 450 கிராம் முதல் 650 கிராம் வரை இருக்கும். முதல் வருடத்தில் 10-15 முட்டைகளும் இரண்டாவது வருடத்தில் 15-20 முட்டைகளும் பின்னர் சுமார் 25-40 முட்டைகளும் இடும். ஒரு ஆண்டில் 40-50 முட்டைகள் வரை கூட இடும். முட்டையிடும் கோழிகளுக்கு வழக்கமாக அளிக்கப்படும் இனவிருத்தி தீவனத்துடன் சில தாது மற்றும் உயிரிச்சத்துகளையும் தொடர்ந்து அளிக்க வேண்டும். கால்சியம் தாது சத்தினை தொடர்ந்து அளித்துவரவேண்டும். முட்டையிடும் கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனத்தின் சமச்சீர் தன்மை பாதிக்கப்படும்போது பல்வேறு பிரச்னைகள் உருவாகும்.

**தோல் முட்டையிடுதல்**: பொதுவாக முட்டையிடும் பருவத்தில் 2-3 தோல் முட்டைகள் இடும். கவலைப்படத் தேவை இல்லை. இந்த முட்டையில்இருந்து எந்த ஒரு பிரச்னையும் இன்றி நல்ல தரமான ஈமுக் குஞ்சுகளைப் பெறமுடியும். இந்த தருணத்தில் கால்சியம் தாதுச்சத்தினை சுண்ணாம்புக்கல், கிளிஞ்சல் துகள்களாக கொடுக்கலாம். சில சமயங்களில் முட்டைக்குழல் வீங்குதல், உணவுப் பாதையில் உள்ள பிரச்னைகள் காரணமாகவும் கால்சியம் சத்து பற்றாக்குறை ஏற்பட்டு தோல் முட்டைகள் உருவாகும்.

**கருவற்ற முட்டை**: ஆண் கோழிகளுடன் இனச்சேர்க்கை செய்ய வேண்டும். அல்லது செயற்கை முறையில் பெண் கோழிகளுக்கு கருவூட்டம் செய்ய வேண்டும். இனச்சேர்க்கை நன்கு நடந்தபிறகும் தொடர்ந்து கருவற்ற முட்டைகள் இடும் போது ஆண் கோழிகளின் விந்தினை

பரிசோதனை செய்து குறைபாடுகளை அறியவேண்டும். ஆண் கோழிகளின் தீவனத்தில் கால்சியம் சத்து அதிகமாக இருக்கும்போதுகூட கருவற்ற முட்டைகள் உருவாகும். எனவே ஆண் கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனத்தில் கால்சியம் தாது சத்து அதிகம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**முட்டை அடைப்பு:**

ஈமுக் கோழிகள் சில சமயம் முட்டை இட முடியாமல் சிரமப் படும். காரணம் முட்டைக்கரு வெளிவரும் குழாயில் அடைப்பு ஏற்படுவது. இவ்வாறான கோழிகள் அடிக்கடி உட்கார்ந்து எழுந்து நிற்பதோடு முட்டையிடுவதற்கு தொடர்ந்து முயற்சிக்கும். தீவனம் உட்கொள்ளாது. பதட்டத்துடன் காணப்படும். முட்டை அடைப்பு பொதுவாக குளிர்காலத்தில் ஏற்படும். எனவே முட்டை அடைப்பு ஏற்பட்ட கோழிகளை கதகதப்பான வெப்பமுள்ள இடத்தில் வைத்து முட்டையிடச் செய்ய வேண்டும். வழவழப்பான எண்ணெயினை ஆள்காட்டி விரலில் நனைத்து ஆசனவாய் துவாரம் வழியாக செலுத்தி தேய்த்துவிடுவதன் மூலம் ஈமுக் கோழிகளில் ஏற்படும் முட்டை அடைப்பினை சரிசெய்ய முடியும்.

ஈமுக்கோழிகள் முட்டையிடும் அக்டோபர் முதல் மார்ச் வரையிலான மாதங்களில் மேற்கண்ட பிரச்னைகள் பொதுவாக காணப்படும். எனவே ஈமுக்கோழிப் பண்ணையாளர்கள் அந்த மாதங்களில் ஈமுப்பண்ணைகளில் தீவிர கண்காணிப்பினை மேற்கொண்டு ஈமுக்கோழிகள் முட்டை யிடுவதில் ஏற்படும் பிரச்னைகளைக் கண்டறிந்து உடனே சரிசெய்து கொள்ள வேண்டும். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தற்போது ஈமுக்கோழிகள் அதிக அளவில் வளர்க்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் ஈரோடு, நாமக்கல், திருப்பூர், கோயம் புத்தூர், கரூர், திண்டுக்கல் உட்பட ஒருசில இடங்களில் ஆங்காங்கே ஈமுக்கோழிகள் பரவலாகப் பண்ணை முறையில் வளர்க்கப்படுகின்றன. தோராயமாக தமிழகத்தில் உள்ள மொத்த ஈமுக்கோழிகளின் எண்ணிக்கை 35,000 முதல் 50,000 வரை இருக்கலாம் என கருதப்படுகிறது.

(தகவல் மு.அண்ணா ஆனந்த் மற்றும் பி.என்.ரிச்சர்டு ஜெகதீசன், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், மண்டல ஆராய்ச்சி மையம், புதுக்கோட்டை-622 004)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**பரண்மேல் ஆடு வளர்ப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2012,00:00 IST



ஆடுகளுக்கு சிறந்தமுறையில் கொட்டகை அமைத்து, மேய்ச்சலுக்கு அனுப்பாமல் கொட்டகையிலேயே நாள் முழுவதும் அடைத்து வளர்க்கப் பட வேண்டும். ஆடுகளுக்குத் தேவையான பசும்புல், தீவனக் கலவை, காய்ந்த புற்கள் மற்றும் மர இலைகள் அனைத்தையும் கொட்டகையிலேயே கொடுத்துப் பழக்க வேண்டும். மேய்ச்சல் வசதி அறவே இல்லாத இடங்களில் இம்முறை மூலம் ஆடு வளர்க்கலாம். இம்முறையில் வெள்ளாடுகளை தரையிலிருந்து 4 அடி உயரத்தில் சல்லடைத் தரையை மரச்சட்டத்திலோ அல்லது கம்பிகளிலோ கட்டி வளர்க்க வேண்டும். ஆடுகளின் சாணம் மற்றம் சிறுநீர் கீழே விழுவதற்கு ஏற்றவாறு இரு பலகை அல்லது கம்பிகளுக்கு இடையே உள்ள இடைவெளி 1-2 செ.மீ. இருக்குமாறு அமைக்க வேண்டும். இதனால் ஆடுகள் சுகாதாரமாக வும், நோய் பாதிப்பின்றியும் இருக் கும். இம்முறையில் ஆடுகளுக்கு தேவையான பசுந் தீவனத்தை கயிற் றில் கட்டியோ அல்லது இரண்டு அடி உயரத்தில் மரப்பெட்டியில் வைத்தோ அளிக்க வேண்டும்.

இம்முறையில் குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையில் ஆடுகளை வளர்க்க முடியும். ஒவ்வொரு ஆட்டிற்கும் 10 சதுர அடி இடம் போதுமானது. மேய்ச்சல் நிலம் இல்லாதவர்கள் இந்த முறையில் வளர்க்கப்படும் ஆடுகள் மேய்ச்சலினால் வீணாகும் சக்தியை சேமித்து வைத்தால் அதிக உடல் எடையை அடைகின்றது. ஆடுகள் நாளொன்றுக்கு 120 முதல் 160 கிராம் வரை உடல் எடை அதிகரிக்கிறது.

இம்முறையில் வளர்க்கப்படும் ஆடுகளை நன்முறையில் பரா மரித்தால் ஆடுகள் சுகாதாரமாகவும் அதிக எடையுடனும் காணப்படும். இம்முறையில் வளர்க்கப்படும் ஆடுகள் மேய்ச்சலினால் சக்தியை வீணாக்காமல் சேமித்து வைப்பதால் குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையில் ஆடுகளை வளர்ப்பதால் நோயின் தாக்கம் சற்று அதிகமாக இருக்கும். குறிப்பாக புற ஒட்டுண்ணிகளான பேன், உண்ணி, தெள்ளுப்பூச்சி பாதிப்பு, ரத்த கழிச்சல், குடற்புழுக்களின் தாக்கம், சளி போன்ற பாதிப்புகள் அதிகமாக இருக்கும். அதனால் அதற்கு உண்டான பராமரிப்பு முறைகளை தவறாமல் கடைபிடித்து வளர்க்க வேண்டும்.

**கொட்டகை அமைத்தல்**: ஆடுகளுக்கு கொட்டகை அமைக்க காற்றோட்ட வசதியுடன் கூடிய மேடான வடிகால் வசதியுள்ள பகுதியை தேர்ந்தெடுத்து கொட்டகை அமைக்க வேண்டும். கொட்டகையானது நீளவாக்கில் கிழக்கு-மேற்காக அமைக்க வேண்டும். கொட்டகையின் அகலம் 20 அடி முதல் 25 அடி வரை இருக்கலாம். அகலம் அதிகமானால் காற்றோட்டம் பாதிக்கப்படும். ஆடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப நீளத்தை அதிகரித்துக் கொள்ளலாம்.

கொட்டகையின் உயரம் நடுப் பகுதியில் 9-21 அடி உயரத்திலும் சரிவான பக்கப்பகுதி 6-9 அடி உயரத்திலும் அமையவேண்டும். ஆட்டுக்கொட்டகையின் கூரை ஆஸ்பெஸ்டாஸ், மங்களூரு ஓடு அல்லது கீற்று கொண்டு அமைக்க வேண்டும். பரண் மேல் வளர்ப்பு முறையில் வளர்க்கப்படும் ஆடுகளுக்கு 10 சதுர அடி இடவசதி ஒவ்வொரு ஆட்டிற்கும் தேவைப் படும். மேலும் 20 சதுர அடி இடம் கொட்டகையை ஒட்டி திறந்தவெளி பகுதியில் கொடுக்க வேண்டும். வெள்ளாடுகளுக்கான தீவனத் தொட்டிகள் மரத்தினால் செய்யப்பட்டு ஒன்றரை அடி உயரத்தில் ஒன்றரை அடி உள்பக்கம் குழியாக இருக்குமாறு அரைவட்ட வடிவில் அமைக்க வேண்டும்.தொடர்புக்கு: முனைவர் சித்ரா, 99442 87542.-கே.சத்யபிரபா, உடுமலை

**வாழை, மஞ்சள் விலை வீழ்ச்சி: மக்காச்சோளம் சாகுபடியில் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2012,01:53 IST

கோபிசெட்டிபாளையம் : வாழை, மஞ்சள் விலை வீழ்ச்சி காரணமாக கோழித் தீவனமாக பயன்படும் மக்காச்சோளம் அதிகளவில் பயிரிடப்பட்டுள்ளது.

கோபி வட்டாரத்தில் ஆண்டுதோறும் நெல், கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்கள் அதிகம் பயிரிடப்படுகிறது. ஆண்டு முழுவதும் தண்ணீர் வசதியுள்ள கோபி பகுதியில், நெல், வாழை,

மஞ்சள் ஆகிய பயிர்களை விவசாயிகள் அதிகளவில் பயிரிடுகின்றனர்.
எனினும், சீஸனுக்கு ஏற்ற வகையில் பயிர் சாகுபடி நடக்கிறது.சென்றாண்டில் மஞ்சள், வாழை ஆகியவற்றின் விலை கணிசமான அளவுக்கு இருந்ததால், அவை அதிகளவில் பயிரிடப்பட்டது. நடப்பாண்டு வாழை, மஞ்சள் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. மஞ்சள் விவசாயிகள் உரிய விலை நிர்ணயம் செய்யக் கோரி போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.
வாழை, மஞ்சள் விலை வீழ்ச்சி மற்றும் விவசாய கூலியாட்கள் பற்றாக்குறையால் மல்பெரி, பப்பாளி, மரவள்ளி மற்றும் கத்தரிக்காய், வெண்டைக்காய் உள்ளிட்ட தோட்டக்கலை பயிர்களை பயிரிடத் துவங்கியுள்ளனர்.அரக்கன்கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன பகுதிகளுக்கு இனி, ஏப்ரல், 15ம் தேதி பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும்.
மானாவாரி மற்றும் இரவை பாசனத்துக்காக கீழ்பவானி பாசனப் பகுதிகளில் மட்டும் தற்போது தண்ணீர் திறக்கப்பட்டது. அணையின் நீர்மட்டம் படிப்படியாக குறைந்ததால் மானாவாரி பாசனத்துக்கான தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது.கோபி சுற்று வட்டாரத்தில் கோழித் தீவனமாக பயன்படும், "கோ 1' மற்றும் "கோ ஹைச் (எம்) 4' ஆகிய மக்காச்சோளம் ரகங்கள் பயிரிடப்பட்டு வருகிறது.மேலும் பாப்கார்ன், சூப் உள்பட உணவுப் பொருளாகவும் மக்காச்சோளத்தை பொதுமக்கள் பயன்படுத்துகின்றனர்.கோழித் தீவனத்தில் முக்கிய மூலப்பொருளாக மக்காச்சோளம் இருப்பதாலும், உடனடியாக விற்பனையாகி விடுவதாலும், கோபி விவசாயிகள் மக்காச்சோளத்தை பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## நவீன கரும்பு சாகுபடியால் விளைச்சலை அதிகரிக்கலாம் :வேளாண் பல்கலை துணைவேந்தர் தகவல்

திவு செய்த நாள் : பிப்ரவரி 22,2012,00:47 IST



கோவை வேளாண் பல்கலையில் சந்தை வழி விரிவாக்கப்பணிகள் குறித்த கருத்தரங்கம் நடந்தது. இதில், மாநில பதிவாளர் அண்ணாமலை பேசினார். அருகில், துணைவேந்தர் முருகேசபூபதி உள்ளிட்டோர்.

கோவை : "நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறையால், கரும்பு விளைச்சலை அதிகரிக்க முடியும்' என, கரும்பு விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண் பல்கலையில், "நீடித்த நவீன கரும்பு சாகுபடிக்கான நாற்றாங்கால் தொழில்நுட்பங்கள்' குறித்த இரண்டு நாள் பயிற்சி வகுப்பு, கரும்பு ஆலைகளில் பணியாற்றும் அலுவலர்களுக்கு நடந்தது. மாநிலம் முழுவதிலிருந்தும் 45 அலுவலர்கள் பங்கேற்றனர். பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி, பயிற்சியை துவக்கி வைத்து பேசியதாவது:தமிழகத்தின் மொத்த கரும்பு சாகுபடி பரப்பு, 3.06 லட்சம் எக்டர். இதன் சராசரி விளைச்சல், எக்டருக்கு 105 டன்கள். தேசிய அளவில், கரும்பு உற்பத்தி திறனில், தமிழகம் முன்னிலையில் உள்ளது. நீடித்த நவீன கரும்பு சாகுபடி மூலம், ஒரு எக்டருக்கு 249 டன்கள் வரை, விளைச்சல் பெற முடியும் என, சோதனை திட்டங்கள் மூலம், கண்டறியப்பட்டுள்ளன. இதன் மூலம், முன் எப்போதும் இல்லாத அளவிற்கு, சாகுபடியினை அதிகரிக்க செய்யலாம். நீடித்த நவீன கரும்பு சாகுபடியில், பரு வில்லை கரணை பயிரிடும் முறை மூலம், 250 கிலோ கரணைகளை மட்டும், ஒரு எக்டருக்கு பயன்படுத்தி, உற்பத்தி செலவை குறைக்கலாம். மரபாக கரும்பு பயிரிடும் உழவர்களுக்கு, இந்த நவீன முறையை கற்றுத்தர, கரும்பு அலுவலர்கள் முன்வர வேண்டும். தமிழகத்தில் பயிரிட்டு வரும்,கோ 86032 என்ற கரும்பு ரகத்தில், சிவப்பு வேர் அழுகல் நோய் தாக்கும். தமிழ்நாடு வேளாண் பல்கலை, சமீபத்தில் வெளியிட்டுள்ள புதிய கரும்பு ரகங்களான, கோ.க 24, சிறுகமணி 7 ஆகிய, ரகங்களை பயிரிடுவது நல்லது. கோ.க 24 ரகம் அதிக விளைச்சலாக, எக்டருக்கு 228 டன்களை தரக்கூடியது. இந்த ரகத்தை பயிரிட்டு, நீடித்த நவீன கரும்பு சாகுபடி மூலம், எக்டருக்கு 300-350 டன் விளைச்சலை பெறலாம். இந்த ரகம், இயந்திர அறுவடைக்கும் உகந்தது; 12 சதவீதம் வரை சர்க்கரை கட்டுமானம் கிடைக்கும். சிறுகமணி 7 ரகத்தில், 13.6 சதவீதம் வரை, சர்க்கரை கட்டுமானம் கிடைக்கும். சர்க்கரை ஆலைகளில், பொதுவாக 10 சதவீதம் வரை மட்டுமே, சர்க்கரை கட்டுமானம் கிடைக்கிறது. எனவே, புதிய கரும்பு ரகங்களை, கரும்பு அலுவலர்கள் உழவர்களுக்கு அறிமுகப்படுத்தி, உழவர்கள் பயனடையச் செய்ய வேண்டும்.

இவ்வாறு, அவர் கூறினார். பல்கலை விரிவாக்க கல்வி இயக்குநர் கலைச்செல்வன், நீர்நுட்பவியல் மைய இயக்குநர் செல்லமுத்து, பயிற்சித் துறை பேராசிரியர் விஜயராகவன் உள்ளிட்டோர் கருத்துகளை தெரிவித்தனர்.

**வேளாண் பல்கலையில் ஊறுகாய் தயாரிப்பு பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2012,00:47 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை : தமிழ்நாடு வேளாண் பல்கலையில், "மசாலாப் பொடிகள் மற்றும் ஊறுகாய் தயாரிப்புப் பயிற்சி', வரும் 28, 29ல் நடக்கிறது. மசாலாப் பொடிகள், தயார்நிலை பேஸ்ட், காளான் ஊறுகாய், வாழைப்பூ ஊறுகாய், பாகற்காய் ஊறுகாய், வெங்காய ஊறுகாய் மற்றும் பலவகை காய்கறி

ஊறுகாய்கள் தயாரிப்பது குறித்து, பயிற்சி அளிக்கப்படுகிறது. ஆர்வமுள்ளவர்கள் ரூபாய் 1,000 செலுத்தி, தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம்.

பல்கலைக்கு நேரில் வர இயலாதவர்கள், பயிற்சி கட்டணத்தொகையை முதன்மையர், வேளாண் பொறியியல் கல்லூரி எனும் பெயரில், வரை ஓலை எடுக்க வேண்டும். அதை, கோவையில் உள்ள பாரத ஸ்டேட் வங்கியில், பெறத்தக்க வகையில் எடுத்து, பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641003 எனும் முகவரிக்கு, அனுப்ப வேண்டும். உங்கள் பெயரை வரும் 27க்குள் பதிவு செய்ய வேண்டும், கூடுதல் விபரங்களுக்கு, 0422-6611268 எனும் தொலைபேசியை, தொடர்பு கொள்ளவும். இவ்வாறு, வேளாண் பல்கலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வேளாண்துறை ஆலோசனை பெற விவசாயிகளுக்கு அறிவுரை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2012,00:33 IST

கருத்தை பதிவு செய்ய

கோவை : சந்தை நிலவரம் குறித்து, விவசாயிகள் தொடர்ந்து வேளாண் துறை மூலம் ஆலோசனை பெற வேண்டும்; அதற்கேற்ப பயிரிடல் வேண்டும் என்று பயிற்சி முகாமில் வலியுறுத்தப்பட்டது. கோவை வேளாண் பல்கலையில், சந்தை வழி விரிவாக்கப்பணிகள் குறித்த, ஐந்து நாள் பயிற்சி முகாம், நேற்றுமுன்தினம், பல்கலையில் துவங்கியது.

மாநில கூட்டுறவு பதிவாளர் அண்ணாமலை, பயிற்சி முகாமை துவக்கிவைத்து பேசியதாவது: விவசாயிகள், ஒரு பொருளை பயிர் செய்யும் போது, அந்நேரம் சந்தையில் இருக்கும் கிராக்கியை பொருத்து, அதிக லாபம் பெறுகின்றனர். ஆனால், குறிப்பிட்ட லாபத்தை முன்வைத்து, அதே பயிரை விளைவித்து, முன்கிடைத்த லாபம் மீண்டும் கிடைக்கும் என்று, எதிர்பார்ப்பது தவறு. எனவே, மாற்றுப்பயிர் செய்வதற்கு முயற்சிக்க வேண்டும். அதற்கான அனைத்து ஆலோசனைகளையும், வேளாண் பல்கலை வழங்குகிறது. பயிற்சி முகாம் மூலம், பயிர் செய்யும் விவசாயிகளின் நலனை பேணிக் காப்பதுடன், அதிக பலன் ஈட்டவும், பலன் பெறவும் வேண்டும். நுகர்வோர்களுக்கு தரமான பொருட்களை உற்பத்தி செய்து அளிக்க வேண்டும். விவசாயிகள் தங்களின் உற்பத்தி பொருட்களை, இடைத்தரகர்கள் உதவி இல்லாமல், நேரடியாக அரசு மூலமோ, அதன் சார்ந்த துறைகள் மூலமோ விற்பனை செய்ய வேண்டும். இவ்வாறு, அண்ணாமலை பேசினார்.வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை வகித்து பேசியதாவது: விவசாயிகள் கணக்கு பார்த்து விவசாயம் செய்தால் மட்டுமே, லாபம் அடையமுடியும். மஞ்சள், குவிண்டாலுக்கு ரூ.16 ஆயிரம் விற்றபோது, விவசாயிகளுக்கு லாபமாக இருந்தது. ஆனால், இப்போது குவிண்டாலுக்கு ரூ.ஐயாயிரமாக விற்கிறது. தொடர்ந்து வேளாண்

துறை மூலம், ஆலோசனை பெறுவது மிகவும் முக்கியம்.கல்வி, ஆராய்ச்சி, விரிவாக்கம் மூலம், வேளாண் பல்கலையில் 39 ஆராய்ச்சி மையங்களும், 167 பண்ணைக் கருவிகளும், 863 புதிய வகை பயிர் வகைகளும் உள்ளன. 1947ல் இந்திய மக்கள் தொகை 36 கோடியாக இருந்தபோது, உற்பத்தி திறன் 53 மில்லியன் டன் ஆக இருந்தது. 2010ல் 121 கோடியாக மக்கள் தொகை ஆனபோது, 241 மில்லியன் டன் உற்பத்தி பெற முடிந்தது. சர்வதேச அளவில், கடந்தாண்டு ஐந்து மில்லியன் டன் பாசுமதி அரிசியும், 10 லட்சம் டன் கோதுமையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யுமளவுக்கு சிறப்பு பெறுகிறோம். இந்தாண்டு,மொத்த உற்பத்தித்திறன், 245 மில்லியன் டன் பெறுவதற்கு திட்டமிட்டாலும், ஐந்து டன் கூடுதலாகவே பெற வாய்ப்பு உள்ளது. ஆண்டு ஒன்றுக்கு தானிய பொருட்களும், பழ வகைகளும், நான்காயிரத்து 600 கோடி ரூபாய்க்கு, வீணாகப் போகிறது. இதனை தவிர்க்க அரசு மாற்று வழி கண்டு வருகிறது, என்றார். வேளாண் பல்கலை விரிவாக்கத்துறை இயக்குனர் கலைச்செல்வன் வரவேற்றார். கோவை நபார்டு வங்கி துணைப் பொது மேலாளர் இனிகோ அருள் செல்வன்,வேளாண் சந்தை வழி துறை துணை இயக்குனர் சுப்ரமணியன்,வேளாண் பல்கலை"கார்டு' இயக்குனர் அஜன் ஆகியோர் பேசினர். வேளாண் பல்கலை சந்தை விரிவாக்கத்துறை பேராசிரியர் ராமநாதன் நன்றி கூறினார்.

**கறவை மாடுகளை விற்கும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2012,01:27 IST

கருத்தை பதிவு செய்ய

சுல்தான்பேட்டை : போதிய வருமானம் இல்லாததால், சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் கறவை மாடு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், மாடுகளை விற்பனை செய்து வருகின்றனர்.

சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் செஞ்சேரிப்புத்தூர், ஜல்லிப்பட்டி, கரடிவாவி, வதம்பச்சேரி, பூராண்டம்பாளையம், வாரப்பட்டி, காமநாயக்கன்பாளையம், கம்மாளப்பட்டி, மந்திரிபாளையம், தாளக்கரை, குமாரபாளையம் உட்பட பல கிராமங்களில், விவசாயத்துக்கு அடுத்த படியாக கறவை மாடு வளர்ப்புத்தொழில் முக்கியமானதாக உள்ளது.

இப்பகுதியில் மட்டும் 5,000க்கும் மேற்பட்ட கறவை மாடுகள் உள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படும் பால், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் கேரளா மற்றும் தமிழகத்தின் பிற பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

குறைந்த முதலீட்டில் மேற்கொள்ளப்படும் கறவை மாடு வளர்ப்புத்தொழில், பிற தொழில்களை விட, அதிகப்படியான உபரி வருமானத்தை ஈட்டி தந்ததால், இத்தொழிலில் ஆர்வமுடன் தொடர்ந்து ஈடுபட்டனர்.

கலப்பின உயர்தரமான கறவை மாடுகளான சிந்து, ஜெர்சி ரக மாடுகள், விவசாயிகளால் விரும்பி

வளர்க்கப்படுகிறது. இந்நிலையில், கடந்த மூன்று ஆண்டுகளாக, சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் போதிய அளவு மழை பெய்யவில்லை. மேய்ச்சல் நிலங்களும் சுருங்கி விட்டன. இதன் காரணமாக, கால்நடைகள் மிகவும் விரும்பி உண்ணும் பசுந்தீவனங்களான புல், கோரைப்புல் விளைச்சல் குறைந்து விட்டது.

வெளியிடங்களில் தட்டுப்போர், வைக்கோல், பசும்புல் ஆகியவற்றை விலைக்கு வாங்கி கொடுக்கும் சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளனர். பாளை தவிடு கிலோ ரூ.ஏழு, கலப்பின தீவனம் கிலோ ரூ.15, பருத்தி புண்ணாக்கு கிலோ ரூ.12க்கு விற்கப்படுகிறது. ஒரு மாட்டுக்கு சராசரியாக தினமும் ரூ.90 முதல் 100 வரை தீவன செலவு ஏற்படுகிறது.

பால் கொள்முதல் விலை லிட்டர் ரூ.19 ஆக உள்ளது. சராசரியாக ஒரு கலப்பின கறவை மாட்டில் எட்டு லிட்டர் முதல் 10 லிட்டர் வரை பால் கிடைக்கிறது. தீவன செலவு, பராமரிப்பு செலவு ஆகியவற்றை கணக்கிட்டால், சராசரியாக ஒரு மாட்டில் இருந்து விவசாயிக்கு மாதம் ரூ.1,200 கூட கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, சுல்தான்பேட்டை ஒன்றியத்தில் கறவை மாடுகளை விவசாயிகள் விற்பனை செய்து வருகின்றனர். எனவே, 50 சதவீத மானியத்தில் கலப்பு தீவனம் வழங்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**தண்ணீர்பந்தம்பட்டியில் ஈமு பண்ணை துவக்கம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2012,01:31 IST

கருத்தை பதிவு செய்ய

எரியோடு:தண்ணீர்பந்தம்பட்டியில் தாராபுரம் ஓம் சக்தி ஈமு பார்ம்ஸ் நிறுவனத்தினர் கிளை துவக்கியுள்ளனர்.நிறுவன இயக்குனர் எம்.எஸ்.குமார் கூறியது:

இப்பகுதிக்கான ஒருங்கிணைப்பாளராக வேடசந்தூர் முன்னாள் எம்.எல். ஏ., ஆண்டிவேல் செயல்பட்டு வருகிறார். அவரது தோட்டத்தில் தற்போது பிரதான கிளை பண்ணையை ஏற்படுத்தியுள்ளோம். திண்டுக்கல் மாவட்டத்தில் அனைத்து பகுதியிலும் எங்கள் நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பண்ணைகள் அமைத்து தரப்பட்டுள்ளன. ஈமு கோழி முட்டை பருவத்திற்கு வந்ததும் தண்ணீர்பந்தம்பட்டி பண்ணைக்கு கொண்டு வரப்படும். இங்கேயே இனபெருக்க வசதியும், குஞ்சுகளும் பொறிக்க வைக்கப்படும். ஈமு குஞ்சுகள் 90 நாட்கள் இங்கு வளர்ந்த பிறகு, ஒப்பந்த பண்ணையாளர்களிடம் வழங்கப்படும். மருத்துவம், தீவனம் போன்றவற்றை நிறுவனமே இலவசமாக தரும். வெகு தொலைவில் இருந்து கிடைத்த சேவை, தற்போது அருகிலேயே எளிதாகவும், நம்பிக்கையுடனும் விவசாயிகளுக்கு கிடைக்கும்' என்றார்.

**விவசாயிகளுக்கு நாளை பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2012,01:16 IST

கருத்தை பதிவு செய்ய

வடமதுரை:தரமான சிறுதானிய விதை உற்பத்தியை பெருக்க விஞ்ஞானிகள் மூலம் விவசாயிகளுக்கு, நாளை பயிற்சி அளிக்கப்படுகிறது. வேளாண் உதவி இயக்குனர் பாஸ்கரன் கூறியது: கிணறு, குளங்களில் இருக்கும் குறைந்த நீரை கொண்டு சிறுதானிய விதை உற்பத்தியை பெருக்க, விதை கிராமம் திட்டத்தின் கீழ் வடமதுரை வட்டார விவசாயிகளுக்கு பயிற்சி தரப்படுகிறது. நாளை வடமதுரை ராஜ்மகால் திருமண மண்டபத்தில் நடக்கும் பயிற்சியில், வாகரை மக்காச்சோள ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் பங்கேற்கின்றனர்.மண் மாதிரி, சான்று விதை உற்பத்தி, உர நிர்வாகம், பயிர் பாதுகாப்பு குறித்து விவரிப்பர். விவசாய கண்காட்சியும் நடக்கிறது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**விவசாயிகள் கவனத்திற்கு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 22,2012,02:46 IST

கருத்தை பதிவு செய்ய

வருஷநாடு:கடமலைக்குண்டு வேளாண்மை துறையில் விவசாயிகளுக்கு பயிறு வகைகள் மானியத்துடன் வழங்கப்படுவதாக உதவி இயக்குனர் சங்கரன் தெரிவித்துள்ளார்.அவர் கூறுகையில்,"கடமலைக்குண்டு, மயிலாடும்பாறை, வருஷநாடு, கோம்பைத்தொழு, சிங்கராஜபுரம், கண்டமனூர், குமணந்தொழு, வாலிப்பாறை, தும்மக்குண்டு, சிங்கராஜபுரம், முருக்கோடை, மூலக்கடை, ராஜேந்திர நகர் உட்பட்ட கிராமங்களில் தோட்டம் மற்றும் மானாவாரி விவசாயம் அதிகமாக உள்ளது.

வேளாண்மை துறை மூலமாக தட்டான்பயிர்,பாசிபயிர் நுண்ணுயிர் உரமும் மானியத்துடன் வழங்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் வேளாண்மை துறை அலுவலகத்தினை தொடர்பு கொள்ளலாம் என்றார்.